3. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல், பொது கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன், பொது கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. ச. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 16 முதல் 20 வரையிலான ஐந்து அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

4. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 43 – பள்ளிக் கல்வித் துறை

(ஆ) கோரிக்கை எண் 46 – தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 49 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

. . .

(அ) கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012–2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை. மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.14,251,04,32,000/–, மூலதனக் கணக்கில் ரூ.301,72,29,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.5,40,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

5. தகவல் கோரல்

கண்டலேறுவிலிருந்து சென்னைக்கு வரும் கிருஷ்ணா நீர் கால்வாயிலுள்ள உடைப்பைச் சீர் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, என்ன சொல்ல வருகிறீர்கள்?*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டலேறு அணை உடைப்புப் பற்றி ஏற்கெனவே கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறோம். இன்றைக்கு அதனை எடுத்துக்கொள்வதாக எங்களுக்குச் செய்தி வந்தது. அதை இன்றைக்கு எடுத்துக்கொண்டால் பரவாயில்லை. சென்னையில் ** அதனால் அதை இன்றைக்கே எடுத்துக்கொண்டால் நல்லது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. நீங்கள் கண்டலேறு அணை பிரச்சினை குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவாருங்கள். அதுதான் அவைக்குறிப்பில் இருக்கும். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ குற்றச்சாட்டு சொல்லவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். சென்னை மக்களின் குடிநீர்த் தேவைக்கு நிறைவான தண்ணீர் இருக்கிறது. இன்னும் 7 மாதங்களுக்குத் தேவையான தண்ணீர் பாதுகாப்பாக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*